பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 18 | ஞாயிற்றுக்கிழமை | 02.03.2025 | அதிர்வு 210

## குட்டித் தேர்தலில் ‘மான்’ தனிவழி!



எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி தனித்துப் போட்டியிடத் தீர்மானம் எடுத்துள்ளது 07

# புதுடில்லியில் ரணில் - மோடி சந்திப்பு

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் நேற்று சந்திப்பு நடைபெற்றுள்ளது.

புதுடில்லியில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்ட நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது பல்வேறு பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன என்று இந்தியப் பிரதமர் தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.



# முதலமைச்சர் வேட்பாளராக சிறீதரன் களமிறங்கினால் நான் எம்.பியாவேன்

## தேசியப் பட்டியல் ஊடாக ஒருபோதும் நாடாளுமன்றம் செல்ல மாட்டேன் என்று சுமந்திரன் திட்டவட்ட அறிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்கினால், கடந்த பொதுத் தேர்தலில் விருப்பு வாக்கின் அடிப்படையில் இரண்டாவது இடத்தில் இருக்கும் நான் நாடாளுமன்ற உறுப்பினராக வருவேன். அதில் எனக்கு எந்த மறுப்பும் கிடையாது. ஏனெனில் அதில் எந்தத் தவறும் கிடையாது. ஆனால், தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்றம் செல்வது முறையற்றது என்பது எனது நீண்டகால நிலைப்பாடாகும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 06

# முன்னாள் பொலிஸ்மா அதிபர் தென்னக்கோன் தலைமறைவு!

## அவரைத் தேடி விசாரணைகள் தீவிரம் என்று பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவிப்பு



”ஒப்பந்தத்துக்காகப் பொலிஸ் திணைக்களத்தைக் காட்டிக்கொடுத்த முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால், அவர் தலைமறைவாகியுள்ளார். அவரைத் தேடி முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.”

– இவ்வாறு பொதுமக்கள் 07

# வெளிநாட்டு பயணத் தடை



முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் வெளிநாடு செல்வதற்குத் தடை விதித்து மாத்தறை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. 07



பாவம் இலங்கைப் பொலிஸார்..! உலகில் வேறு எந்த நாட்டின் பொலிஸ் துறையினருக்கும் ஏற்படாத நெருக்கடி அவர்களுக்கு.

வழக்கமாக சந்தேகத்திற்குரியவர்களை அல்லது குற்றம் இழைத்தவர்களை பொலிஸ் துறை தேடும். ஆனால் இங்கு இலங்கை பொலிஸார் தங்களின் பொலிஸ் துறை தலைவரையே – பொலிஸ்மா அதிபரையே – தேட வேண்டிய இக்கட்டுக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

இலங்கையின் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டு பதவியேற்றவர் தேசபந்து தென்னக்கோன்.

அவரது நியமனம் தவறானது எனத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களை விசாரணைக்கு ஏற்ற உயர்நீதிமன்றம், விசாரணை முடிவடையும் வரை தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபர் பதவியில் தொடர்வதற்கு இடைக்காலத் தடை விதித்திருந்தது. அதனால் பொலிஸ்மா அதிபர் பதவியை வகிக்க முடியாத 06

# செம்மணி மனிதப் புதைகுழிக்கு உடனே பாதுகாப்பு வழங்குங்கள்

## சபையில் கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து



யாழ். செம்மணி மனிதப் புதைகுழிக்குப் பாதுகாப்பு வழங்கப்படாவிட்டால் சாட்சியங்கள் அழிக்கப்பட்டு, அநீதிகள் நடக்கக்கூடும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் நீதி அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“கொக்குத்தொடுவாய் பகுதியிலும், மன்னார் பிரதேசத்திலும் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தற்போது இரண்டு வாரங்களுக்கு முன்னர் யாழ். செம்மணியில் மனித எச்சங்கள் காணப்படுகின்றன. அதனை நான் நேரில் சென்று பார்த்தேன்.

நான் அங்கு சென்று பார்த்தபோது பொலிஸார் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கவில்லை. நீதிமன்றத்துக்குத் தெரிவிக்கப்படவும் இல்லை.

எங்கள் கட்சி உறுப்பினர்களில் ஒருவர் மயானத்தை நிர்வகிக்கும் குழுவிலும் உள்ளார்.

பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யுமாறு அவரிடம் கூறினேன். அதன்பிறகு நீதிபதிகள் தலையிட்டனர். மேலும், இந்த விவகாரம் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

ஆனால், இங்கே புதைகுழிகள் தொடர்பில் எந்த நெறிமுறையும் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

என் அறிவுக்கு எட்டியவரைத் தெளிவான நெறிமுறை பின்பற்றப்படுவதில்லை. இதற்கு நிதிப் பற்றாக்குறை காரணம் காட்டப்படுகிறது.

இந்த விடயங்களை உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

மன்னார், கொடிக்குத்தொடுவாய் ஆகிய இரண்டு இடங்களிலும் இழுபறி நிலையே காணப்படுகின்றது.

இதனால் யாழ். செம்மணியிலும் ஆதாரங்கள் சிதைக்கப்பட்டு அழிக்கப்படலாம் என்று அஞ்சுகின்றோம்.

குறித்த பகுதிக்குப் பாதுகாப்பு வழங்காமல் இருப்பதால், சாட்சியங்கள் அழிக்கப்பட்டு, அநீதிகள் நடக்கக்கூடும்.” – என்றார்.

# இரண்டு மாவட்டங்களுக்கான மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இரண்டு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கையானது நேற்று சனிக்கிழமை பிற்பகல் 12.30 மணி முதல்இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பதுளை மாவட்டத்தின் பசறை, ஹாலிஎல, கந்தகெட்டிய, ஹப்புத்தளை, ஊவா பரனகம, மீகஹகிவுல, சொரணதொட்ட ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகள் மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகள் ஆகியவற்றிற்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

# எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களால் திட்டமிட்டு பிரச்சினை தோற்றுவிக்கப்பட்டுள்ளது

## அரசாங்கம் தெரிவிப்பு



“சமூகத்தில் எவ்வித எரிபொருள் தட்டுப்பாடும் இல்லை. எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு நாம் இடமளிக்கப்போவதுமில்லை. விலைத் திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் உரிமையாளர்களால் இந்த பிரச்சினை திட்டமிட்டு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.”

– இவ்வாறு தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னான்டோ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“எரிபொருள் விநியோகத்தர்களுக்கும் சமூகத்தில் காணப்படும் நிலைமைக்குமிடையில் பரஸ்பர நிலைமையே காணப்படுகிறது. உண்மையில் சமூகத்தில் எவ்வித எரிபொருள் தட்டுப்பாடும் இல்லை.

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு நாம் இடமளிக்கப் போவதுமில்லை. எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கருகில் நீண்ட வரிசைகள் ஏற்பட்டுள்ளன.

இதற்கு பொறுப்பு கூற வேண்டியது யார் என்பது சரியாக இனங்காணப்படவில்லை. எரிபொருள் விநியோகம் இடம்பெறவில்லையென சமூக வலைத்தளங்களில் பரவலாக தகவல்கள் பகிரப்படுகின்றன.

குறிப்பிட்டவொரு சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நபரொருவர் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளிலிருந்து தாம் விலகுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் எரிபொருள் விநியோகம் எவ்வித தடையும் இன்றி முன்னெடுக்கப்படுகிறது. அவ்வாறிருக்கையில் சமூக வலைத்தளங்களில் எதற்காக இவ்வாறான செய்திகள் பரப்பப்பட்டன என்பது தெரியவில்லை. எரிபொருள் விநியோக செயற்பாடுகளை சீர் குலைப்பதற்காகவே திட்டமிட்டு இவ்வாறான சதிதிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் எரிபொருள் விநியோகத்தர்களுக்கும் இடையில் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. இதன் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாம் எரிபொருள் விநியோக நடவடிக்கைளிலிருந்து விலகுவதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

இவ்வாறு பொறுப்பற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது. தாம் விநியோக செயற்பாடுகளிலிருந்து விலகுவதாகக் கூறிவிட்டு முற்பதிவுகளை வழமை போன்று செய்திருக்கின்றனர். சில விநியோகத்தர்கள் வழமையை விட அதிக அளவில் எரிபொருட்களை முற்பதிவு செய்திருக்கின்றனர்.

அதற்கமைய இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முற்பதிவுகள் 1,696 உம், லங்கா ஐ.ஓ.சி. 471உம், சினொபெக் 391, ஆர்.எம்.பார்க் 366 முற்பதிவு செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய ஒட்டுமொத்தமாக 2,924 முற்பதிவுகள் பதிவாகியுள்ளன. பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் வழமையாகப் பதிவாகும் 1300 முற்பதிவுகளை விட இம்முறை 1600 என்றளவில் பதிவாகியுள்ளது. இது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

எவ்வாறிருப்பினும் இதன் உண்மையான பின்னணியை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். எரிபொருள் நிரப்பும் நிலைய உரிமையாளர்களின் இலாப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் காரணமாகவே விலை நிர்ணயம் இடம்பெறும் கால கட்டங்களில் இவ்வாறான பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

கடந்த 25ஆம் திகதியே விலை மாற்றம் தொடர்பில் நாம் அறிவித்திருக்கின்றோம். ஆனால் இதன் போது எரிபொருள் விநியோகத்தர்கள் எமக்கு எந்தவொரு விடயம் தொடர்பிலும் கருத்து தெரிவிக்கவில்லை.

அல்லது 28ஆம் திகதி வழக்கு விசாரணை இடம்பெற்ற போதும் கூட இது தொடர்பில் அவர்கள் அறிவித்திருக்கலாம். ஆனால் அதனையும் செய்யவில்லை. மாறாக திடீரென எரிபொருள் விநியோகத்தில் இருந்து விலகுவதாக அறிவித்து பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளனர்.” என்றார்.

# வடமராட்சியில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசை





(எஸ்.ரகுதீஸ்)

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில்க் காத்திருந்தனர்.

வடமராட்சி பகுதியில் மத்திகை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் வரிசை அலைமோதிய வண்ணமுள்ளது.

பெற்ரோலியக் கூட்டுத் தாபனத்தின் சாரதிகள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக வெளியான செய்திகளையடுத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கொள்வனவுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருளைக் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணத்தினால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாதுகாப்புக்காக பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



# ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்களால் நாட்டுக்கு பாரிய பிரச்சினை - சுகாதார அமைச்சர்

ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்களால் ஏற்படும் நோய்கள் நாட்டுக்கு பாரிய பிரச்சினையாக மாறியுள்ளதாகவும் இதற்கான சிகிச்சைகளுக்கு அதிகளவு பணம் செலவிட வேண்டியுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பல்லேகலேயில் உள்ள மூலிகை பூங்காவுக்கான களவிஜயமொன்றில் பங்கேற்ற அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான சிகிச்சைகளுக்காக செலவிடப்படும் தொகையான சுதேச ஆயுர்வேத மருத்துவத் துறைக்கு அரசாங்கம் ஆண்டுதோறும் செலவிடும் தொகையைப் போன்று நாற்பது மடங்கு அதிகம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுதேச ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை சேவைகளை வலுப்படுத்துவதற்கு, நாட்டின் மூலிகை பூங்கா வலையமைப்பை வலுப்படுத்தவும், உள்நாட்டில் ஆயுர்வேத மருந்துகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சுதேச ஆயுர்வேத மருந்து உற்பத்திக்குத் தேவையான 130க்கும் மேற்பட்ட மருத்துவ மூலப்பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுவதாகவும், இதற்காக ஆண்டுதோறும் பெருந்தொகை பணம் செலவிடப்படுவதாகவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.






# பாதாள உலகத்துடன் தொடர்புடைய பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை

பாதாள உலகத்துடன் தொடர்புடைய பொலிஸ் உட்படப் பாதுகாப்புப் படையினருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

அப்படிப்பட்டநபர்கள்யாரேனும்அடையாளம்காணப்பட்டால், அவர்களுக்கு எதிராக நிறுவனச் சட்டங்கள் மற்றும் குற்றவியல் சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

பாதாள உலகத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்தவர்கள் குறித்து விசேட புலனாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காவல்துறை உட்படப் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த சிலரின் பாதாள உலக நடவடிக்கைகள் குறித்து தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.



சமீபத்தில் பாதுகாப்புப் படைகளில் சேர்க்கப்பட்ட சிலரின் குடும்ப உறுப்பினர்கள் பாதாள உலகத்துடன் தொடர்புடையவர்கள் என்றும் தகவல்கள் வெளி வந்துள்ளன.

எனவே, இது தொடர்பாக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்புப் படையினர் தெரிவிக்கின்றனர்.



# கடல்நீரை நன்னீராகச் சுத்திகரிக்கும் நிலையத்தைப் பார்வையிட்ட ஆளுநர்

யாழ்ப்பாணம் – கிளிநொச்சசி குடிநீர் விநியோகத் திட்டத்தின், தாளையடியில் அமைந்துள்ள கடல்நீரை நன்னீராகச் சுத்திகரிப்புச் செய்யும் நிலையத்தை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

ஆளுநரை, திட்டப் பணிப்பாளர் பொறியியலாளர் திருமதி எஸ்.மாலதி, பொறியியலாளர் விஜயகாந் தலைமையிலான குழுவினர் வரவேற்றனர்.

குடிநீர் விநியோகத் திட்டத்தின் கட்டுப்பாட்டு அறையின் செயற்பாடுகளை ஆளுநர் பார்வையிட்டார். அதன் பின்னர் கடல்நீரை உள்ளெடுக்கும் நிலையம், சுத்திகரிப்பு மற்றும் விநியோகம் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளையும் நேரில் சென்று அவர் பார்வையிட்டார்.

இதன்போது திட்டப் பணிப்பாளர் மற்றும் பொறியியலாளர்களால் உரிய விளக்கங்களும் ஆளுநருக்கு வழங்கப்பட்டன.

















## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நிலையில் தேசபந்து தென்னக்கோன் இருந்தார். அவரது இடத்துக்கு பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரே இப்போது பணியாற்றி வருகிறார்.

இந்த நிலையில் முன்னர் பியகமவில் ஹோட்டேல் ஒன்றில் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் சட்ட விரோத சோதனை நடவடிக்கையின் போது ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக தேசபந்து தென்னக்கோனைக் கைது செய்யுமாறு மாத்தறை நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை காணவில்லை என்றும், அவரைத் தாங்கள் தேடி வருகின்றனர் என்றும் பொலிஸார் நீதிமன்றத்தில் கூறியமையை அடுத்து தேசபந்து தென்னக்கோன் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு எதிராக மாத்தறை நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

ஆக, இலங்கையின் பொலிஸ் திணைக்களம் பொலிஸ்மா அதிபரையே காணவில்லை என்று நீதிமன்றுக்கு கைவிரிக்கும் நிலையில்தான் பொலிஸ் துறையின் சீத்துவம் இருக்கின்றது.

\+ + +

வரும் வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படும் ஒன்பது கட்சிகள் அடங்கிய புதிய கூட்டில் நீதியரசர் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி பெரும்பாலும் இடம்பெறாது என இப்பத்தியில் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டி வந்தேன். இப்போது கட்சியின் பிரமுகர் மணிவண்ணன் தமது கட்சியினர் வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தங்கள் கட்சியின் மான் சின்னத்திலேயே போட்டியிடுவார்கள் என்று தமது முகப்புத்தகம் மூலம் அறிவித்திருக்கிறார். அதன் அர்த்தம் தங்கள் சின்னமல்லாத வேறு கூட்டணியில் தாங்கள் இம்முறை தேர்தலை எதிர்கொள்ளப் போவதில்லை என்பதுதான்.

ஏற்கனவே மேற்படி சங்கு சின்னக் கூட்டணியிலிருந்து ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் விலகி விட்டது என்பது தெரிந்ததே.

\+ + +

வேலியே பயிரை மேயும் கதைப்பற்றி அடிக்கடி கேள்விப்படுகிறோம். இதுவும் அந்த வரிசையில் ஒரு தகவல்தான்.

திருகோணமலை நகரத்தில் திருகோணமலை பொலிஸ் நிலையத்திலும், அருகில் உப்புவெளி பொலிஸ் நிலையத்திலும் பணியாற்றும் மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்களின் நடத்தைகள், செயற்பாடுகளில் சந்தேகம் கொண்ட மேலதிகாரிகள் அவர்கள் போதை வஸ்து உட்கொண்டிருக்கலாமென சந்தேகம் கொண்டு அவர்களை உரிய மருத்துவ பரிசோதனைக்காக கொழும்பு நரஹன்பிட்டியில் உள்ள பொலிஸ் வைத்தியசாலைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தனர். மூவரையும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் திருகோணமலை ரயில் நிலையத்துக்குக் கூட்டிச் சென்று அவர்களுக்கான கொழும்பு ரயில் டிக்கெட்டுகளை வாங்கிக் கொண்டிருந்த போது மூவரும் திடீரென அங்கிருந்த. நழுவித் தலைமறைவாகினர் எனக் கூறப்படுகிறது. அவர்களில் ஒருவர் பின்னர் திருகோணமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். மூவரையும் உடனடியாக சேவையிலிருந்து இடைநிறுத்தி விசாரணைகளைத் தொடர மேலதிகாரிகள் முடிவு எடுத்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

\+ + +

இலங்கை விமானப்படைக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கான விளம்பரம் யாழ்ப்பாணத்தில் தமிழில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

படையினரின் எண்ணிக்கை 2030 இற்குள் குறைக்கப்படும் எனவும், இராணுவத்தினர் ஒரு லட்சமாகவும், கடற்படையினர் 40 ஆயிரமாகவும், விமானப் படையினர் 18 ஆயிரமாகவும் குறைக்கப்படுவர் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டு விவாத உரையின்போது குறிப்பிட்டிருந்தார்.

இதேநேரம் தற்போது நாட்டில் 3 லட்சத்து 17 ஆயிரம் படையினர் உள்ளனர் எனத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் குறிப்பிட்டிருந்தார்.

நாட்டில் தற்போது விமானப் படையில் உள்ள துருப்புகளின் எண்ணிக்கை சுமார் 30 ஆயிரம் என்று கூறப்படுகின்றது. அதை அடுத்த 4 வருடங்களில் 18 ஆயிரமாகக் குறைக்கப் போகின்றார் என்கிறார் ஜனாதிபதி. ஆனால் மறுபுறத்தில் அப்படைக்கு ஆள்திரட்டும் கைங்கரியம் மும்முரமாக நடக்கின்றது.

அந்த வரிசையில் விமானப்படைக்கு ஆள் சேர்க்க யாழ்ப்பாணத்தில் விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.




## முதலமைச்சர் வேட்பாளராக சிறீதரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொழும்பில் தனியார் தொலைக் காட்சி ஒன்றுக்குச் சுமந்திரன் விசேட நேர்காணலை வழங்கியிருந்தார். அந்த நேர்காணலில், "மீண்டும் ஒருமுறை உங்களைத் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் செல்லுமாறு அழைப்பு விடுத்தால் அல்லது ஒருவர் இராஜிநாமா செய்து வெற்றிடமாகும் பதவிக்கு நாடாளுமன்றம் செல்லுமாறு அழைப்பு விடுத்தால் அந்தப் பொறுப்பை ஏற்பதற்கு நீங்கள் தயாராக இருக்கின்றீர்களா?" – என்று ஊடகவியலாளரால் கேள்வி கேட்கப்பட்டிருந்தது.

அதற்குச் சுமந்திரன் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் எங்களுடைய கட்சியில் விருப்பு வாக்கின் அடிப்படையில் இரண்டாவது இடத்தில் நான் இருக்கின்றேன்.

எங்களுடைய கட்சிக்கு இந்தத் தடவை ஓர் ஆசனம் கிடைத்த காரணத்தினால் மட்டும்தான் நான் நாடாளுமன்றத்தில் பிரதிநிதியாக இருக்கவில்லை.

எமது கட்சிக்கு இரண்டு ஆசனங்கள் கிடைத்திருந்தால் நானும் இந்த நாடாளுமன்றத்தில் இருந்திருப்பேன்.

எனினும், நாடாளுமன்றத் தேர்தல் முறைமையின்படி எமது கட்சியில் முதலாவது இடத்தைப் பெற்ற சிவஞானம் சிறீதரன் ஏதாவது காரணத்துக்காக இராஜிநாமா செய்தால், எவரும் எதுவும் சொல்லாமலே நான்தான் நாடாளுமன்ற உறுப்பினராக வருவேன். அதில் எந்தத் தவறும் கிடையாது.

ஆகையினால் விருப்பு வாக்கு அடிப்படையில் நான் இரண்டாம் இடத்தில் இருக்கின்றேன். சிறீதரன் ஏதாவது ஒரு காரணத்துக்காக இராஜிநாமா செய்வாராக இருந்தால் நான் நாடாளுமன்ற உறுப்பினராக வருவேன்.

அவ்வாறான தனது இராஜிநாமா தொடர்பில் சிறீதரன் கோடிகாட்டியும் இருக்கின்றார். அதாவது மாகாண சபைத் தேர்தல் வருகின்றது என்றும் அரசியல் குழுக் கூட்டத்தில் அவர் கோடிகாட்டிச் சொல்லியிருந்தார்.

அது வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கானதாகவும் இருக்கலாம். ஆனால், அப்படி அவர் நேரடியாகச் சொல்லவில்லை.

மேலும், மாகாண சபைத் தேர்தல் வருகின்றதால் அந்த வேளையில் சில மாற்றங்களும் நிகழலாம் என்றும், சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வரலாம் என்றும் சிறீதரன் சொல்லியிருந்தார்.

ஆனால், அதை இப்போது நான் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றதென்றல்ல. ஆனால், இப்போது நான் என்ன சொல்ல வருகின்றேன் என்றால் ஒரு மாவட்டத்தில் அடுத்த ஸ்தானத்தில் இருக்கின்ற ஒருவருக்கு எந்த வேளையிலும் நாடாளுமன்றத்துக்குச் செல்லுகின்ற ஒரு தேவை ஏற்படலாம்.

அப்படி ஒன்று வந்தால் நான் நாடாளுமன்ற உறுப்பினராக வருவேன். அதில் எனக்கு எந்த மறுப்பும் கிடையாது.

தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் நாடாளுமன்றத் தேர்தலில் நான் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படாமல் இருக்கின்றமையால் தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்றம் செல்வது முறையற்றது என்பது எனது நீண்டகால நிலைப்பாடாகும்." – என்றார்.

## முன்னாள் பொலிஸ்மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"ஊழல், மோசடி தொடர்பான கோப்புக்கள் எம்மிடம் உள்ளன. விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆகவே, அவசரப்பட வேண்டாம். நீதிமன்றத்துக்குக் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் அரசுக்குக் கிடையாது.

நீதிமன்றம் சுயாதீனமாகச் செயற்படுகின்றது. ஆகவே, கடந்த காலங்களைப் போன்று எம்மால் செயற்பட முடியாது. ஒருசிலர் கடந்த நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பணத்துக்காக விற்பனை செய்துள்ளார்கள். இந்த விடயம் தொடர்பிலும் ஆராயப்படும்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமாரவைப் பார்த்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க "அனைத்தும் தெரியும்" என்று குறிப்பிட்டதாக எதிர்க்கட்சியின் உறுப்பினர் குறிப்பிட்டார். கண்ணாடி மாளிகைக்குள் இருந்து கொண்டு கல்லெறிய வேண்டாம்.

ஊழல், மோசடியுடன் தொடர்புடையவர்களின் பெயர்களைக் குறிப்பிடுங்கள், அவர்களின் ஊழல் வரலாற்றைக் குறிப்பிடுவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் நாடாளுமன்றத்துக்கு வந்து எதிர்க்கட்சிகளின் முன்னிலையில் குறிப்பிட்டார். அப்போது எவரும் வாய் திறக்கவில்லை. ஊழல்வாதிகள் அனைவரும் அமைதியாகவே இருந்தார்கள்.

இந்த நாட்டின் சட்டத்தரணிகள்தான் நீதித்துறையைச் சுயாதீனப்படுத்தினார்கள். ஆகவே, சட்டத்தரணிகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். போராட்டத்தின் ஊடாக நீதித்துறை சுயாதீனப்படுத்தப்பட்டது.

தற்போது எதிரணியில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தந்தைக்கும், சிறு தந்தைக்கும் ஏற்றால்போல் தீர்ப்பு எழுதாத காரணத்தால் பிரதமர நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க முறையற்ற வகையில் பதவி நீக்கப்பட்டார். வரலாற்றில் முதன் முறையாக வங்கித் தலைவரை பிரதம நீதியரசராக்கினார்கள். இவ்வாறான வரலாறும் உண்டு.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதித்துறையை மலினப்படுத்தினார். நாடாளுமன்றத்துக்குள் இருந்து கொண்டு தேர்தலும் இல்லை, நிதியும் இல்லை, நீதிமன்றத்தின் அதிகாரம் நீதிமன்றத்துக்கு இல்லை, நாடாளுமன்றத்தக்கு உண்டு என்று நீதிமன்றத்தை மலினப்படுத்தினார். நீதிபதிகளை நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழுவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

நாங்கள் நீதித்துறையை முழுமையாக மதிக்கின்றோம். சுயாதீனமாகச் செயற்படுவதற்கு இடமளித்துள்ளோம். ஜனாதிபதி அநுரகுமார நீதித்துறையுடன் இணக்கமாகவே செயற்படுகின்றார். ஆகவே, நீதித்துறையுடன் எவ்வித முரண்பாடுகளும் அரசுக்குக் கிடையாது.

பிணைமுறி கொடுக்கல் வாங்கல் மோசடியின் சந்தேக நபராகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் தற்போது கேள்வி எழுப்பப்படுகின்றது.

2021.12.24 ஆம் திகதி சிங்கப்பூர் நாட்டின் குறித்த விடயதானத்துடன் தொடர்புடைய தரப்பினர், "கைதிகள் பரிமாற்றல் சட்டத்தின் பிரகாரம் அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு அனுப்ப முடியாது" என்று குறிப்பிட்டுள்ளது.

அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக வழக்கு விசாரணை செய்யப்படுகின்றது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சர்வதேச எண்ணக்கருவுக்கு அமைவாக கைதிகள் பரிமாற்றல் சட்டத்தின் பிரகாரம் தொடர்புடைய நாட்டுக்கு இரண்டு முறை கோரிக்கை விடுக்க முடியும். இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒப்பந்தத்துக்காகப் பொலிஸ் திணைக்களத்தைக் காட்டிக் கொடுத்த முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால், அவர் தலைமறைவாகியுள்ளார். அவரைத் தேடி முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே, அரசு ஏதும் செய்யவில்லை என்று மூன்றாம் தர அரசியல்வாதிகளை போல் குற்றஞ்சாட்ட வேண்டாம்." – என்று எதிர்த்தரப்பினரை நோக்கிப் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

---

## வெளிநாட்டு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாத்தறை, வெலிகம, பெலேன பகு தியிலுள்ள ஒரு உணவகத்துக்கு அருகில் முன்னதாக 2023 ஆம் ஆண்டு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உட்பட 8 பேரைக் கைது செய்து முன்னிலைப்படுத்துமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டிருந்தது.

இதன்படி, அவர் தங்கியிருந்தார் எனக் கூறப்படும் கொழும்பில் உள்ள வீடு உட்பட நான்கு வீடுகள் நேற்றுமுன்தினம் சோதனை செய்யப்பட்டன.

ஆனால், அவர் அந்த வீடுகள் எவற்றிலும் இருக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையிலேயே அவருக்கு இவ்வாறு வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

---

## குட்டித் தேர்தலில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் கூட்டாகப் போட்டியிடப் பேச்சுகள் நடைபெற்று வருகின்றன.


யாழ்ப்பாணத்தில் சந்தித்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், தமக்கிடையில் இரண்டு சுற்றுப் பேச்சுகளில் ஈடுபட்டிருந்தனர்.

9 கட்சிகள் இணைந்து தேர்தலில் கூட்டாகப் போட்டியிடப் போவதாகவும் அறிவித்திருந்தன.

இந்நிலையில், ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் தலைமையில் இயங்கும் கட்சியையும் இந்தப் புதிய கூட்டில் உள்ளடக்கியமையால் சில கட்சிகள் அதிருப்தியை வெளியிட்டிருந்தன.

இதையடுத்து தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் என்பன இந்தப் புதிய கூட்டில் இருந்து வெளியேறத் தீர்மானித்துள்ளன.

இதற்கமைய தமிழ் மக்கள் கூட்டணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மான் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேர்தல் எப்போது?

நிலுவையில் உள்ள உள்ளூராட்சித் தேர்தலை எப்போது நடத்துவது என்பது தொடர்பில் சுதந்திர தேர்தல் ஆணையம் இன்னமும் ஒரு தீர்மானத்தை எடுக்க முடியாத நிலையில் விவகாரம் இழுபறிப்படுவதாகத் தெரிகிறது.

ஆயினும் பெரும்பாலும் நாளை திங்கட்கிழமை கூடும் தேர்தல் ஆணையம் அந்தக்கூட்டத்தில் தேர்தல் தொடர்பில் தீர்க்கமான - தீர்மானகரமான - ஒரு முடிவுக்கு வரக் கூடும் என விடயமறிந்த வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

வரவு - செலவுத் திட்ட விவாதம் தினசரி தொடர்வதால், அது வரும் 21 ஆம் திகதி முடிவடைந்த பின்னர் தேர்தல் அறிவிப்பை விடுக்கும்படி எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி நிற்பதுதான் பிரச்சினைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்றால் - வரும் 21 ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தலை அறிவித்தால் - அதை நடத்தி முடிப்பதில் பெரும் நெருக்கடி ஏற்படும் எனத் தேர்தல் ஆணைய வட்டாரங்கள் கூறுகின்றன.

வரும் மே 12ஆம் திகதி வெசாக் தினமாகும். மார்ச் 21 ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தலை அறிவித்தால், மேற்படி வெசாக் தினம் தேர்தல் பிரச்சார காலத்துக்குள் வந்துவிடும். அப்படி வந்தால் தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பெரும் நெருக்கடி ஏற்படுமெனத் தேர்தல் ஆணையம் கூறுகிறது.

வெசாக் காலத்தில் 'தான' என்ற பெயரில் பல இடங்களிலும் இலவச விருந்துகள், உணவு விநியோகம், வெகுமதிகள், அன்பளிப்பு பொருள்கள் வழங்கல் என்று தாராளமாக இடம்பெறும். இந்த வெசாக்கின் தானத்தின் பெயரில் தேர்தலில் நிற்கும் தரப்புக்களும் அன்பளிப்புகளை வழங்க முயன்றால் அவற்றை தடுப்பதும் கட்டுப்படுத்துவதும் நெருக்கடியாக இருக்கும் என்று தேர்தல் ஆணையம் கருதுகிறது.

ஆகையினால் வெசாக் காலத்தில் தேர்தல் அறிவிப்பும் பிரசாரமும் இடம்பெறுவதை தவிர்த்தே விடயங்களை முன்னெடுக்க வேண்டும் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

எதிர்க்கட்சிகள் கூறுவது போல இம்மாதம் 21ஆம் திகதி வரவு - செலவுத் திட்டம் முடிவடையும் வரை தேர்தல் அறிவிப்பை தாமதித்தால், அதன் பின்னர் மே மாதம் 12ஆம் திகதி வெசாக் முடிந்த பின்னரே தேர்தலை அறிவிக்க முடியும் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

அப்படி நேர்ந்தால் தேர்தல் ஜூலை மாதம் வரை தள்ளிப் போகும் நிலைமை வரும்.

உள்ளூராட்சித் தேர்தல் இப்படித் தாமதமானால் இனி நடக்கக் கூடிய மாகாண சபைத் தேர்தல்களும் அதனால் தள்ளிப் போய், அடுத்த ஆண்டுக்கு அது ஒத்தி வைக்கப்படும் சாத்தியம் நேரலாம் என்று கருதப்படுகின்றது.

ஆகையினால் ஜூன், ஜூலை வரைத் தேர்தலைத் தள்ளிப் போடாமல், வெசாக் தினத்துக்கு முன்னரே - மே 12ஆம் திகதிக்கு முன்பே - இந்த உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்பதில் தேர்தல் ஆணையம் கரிசனையாக இருப்பதாகத் தெரிகிறது.

பெரும்பாலும் மே முதல் வாரத்தில் இந்தத் தேர்தலை நடத்தி முடிக்க தேர்தல் ஆணையம் தீர்மானித்து இருப்பதாகக் கூறப்பட்டாலும், அது பற்றிய முடிவு தேர்தல் ஆணையத்தின் நாளைய கூட்டத்தில் எட்டப்படலாம் என்று நம்பப்படுகின்றது. நாளை வரைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.




# வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடத்திற்கு இருவர் மட்டுமே விண்ணப்பம்

**(ந.லோகதயாளன்)**

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிக்கு வடக்கில் இருந்து இறுதி நேரத்தில் இருவர் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிக்கு மத்திய கல்வி அமைச்சு கடந்த மாதம் 15 ஆம் திகதி விண்ணப்பம் கோரியது.

அவ்வாறு கோரப்பட்ட விண்ணப்பத்தின் இறுதித் திகதி நாளை 03 ஆம் திகதி வரையே உள்ளபோதும் வடக்கில் இருந்து விண்ணப்பிக்க அதிகாரிகள் முன்வரவில்லை. இருந்தபோதும் பலரின் அழுத்தம் காரணமாக இறுதி நேரத்தில் இருவர் மட்டுமே விண்ணப்பித்தனர்.

இவ்வாறு வடக்கில் இருந்து விண்ணப்பிக்க பின்னடித்த நிலையில் அதற்கு பொருத்தமானவர்கள் அல்லது தேர்வு செய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுபவர்களிடம் ஏன் இப் பதவிக்கு விண்ணப்பிக்கவில்லை எனக் கேட்டபோது, பழையவர்கள் அல்லது நேர்மையாக பணியாற்றுபவர்களை மதிக்காத நிலையில் இப்போதுள்ள மேலிடத்தின் முறையற்ற அழுத்தத்துக்குத் தலையாட்டி வேலை செய்ய முடியாது எனப் பதிலளித்தார்.

மாகாண கல்விப் பணிப்பாளர் பதவிக்காக தற்போதைய துணுக்காய் மற்றும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்களே விண்ணப்பித்துள்ளனர் எனத் தெரிகின்றது.

# பனை மரத்தைத் தறித்து வாழ்வாதாரத்தை முன்னெடுப்பது அலுக்கோசு வேலைக்கு சமனான முட்டாள் நடவடிக்கை!

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் சகாதேவன் மன்னார் அரச அதிபருக்கு பதில்

**(த.சுபேசன்)**

அலுக்கோசு வேலையை வாழ்வாதாரத் தொழிலாக ஏற்றுக்கொள்ள முடியாது அது போன்றே பனை தறிப்பதனையும் வாழ்வாதாரமாக கருத முடியாது என பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் பொது மக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு இணங்க பனை தறித்தல் தொடர்பான புதிய ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் வரை ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் பனை தறித்தல் தொடர்பான ஏற்பாடுகளை பின்பற்றப்போவதாக மன்னார் மாவட்ட அரச அதிபர், பனை அபிவிருத்திச் சபைத் தலைவருக்கு அறிவித்திருந்த நிலையிலேயே அவர் மேற்படி விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

பழைய நடைமுறைகள் புதிய அரசாங்கத்தில் பின்பற்றப்படமாட்டாது என்பதனை மன்னார் அரச அதிபர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

புதிய அரசாங்கம் - புதிய கொள்கை என்ற அடிப்படையில்தான் எமது நடவடிக்கைகள் அமையும்.

பனை மரம் தறித்தலை ஒருபோதும் வாழ்வாதாரமாக ஏற்றுக்கொள்ள



முடியாது.

ஒரு பனை மரத்தை பாதுகாத்து அதனூடாக வருடாந்தம் பல மில்லியன் ரூபா வருவாயை பெற ஏதுவான நிலையில் பனை மரத்தை தறித்து வாழ்வாதாரம் நடத்துவது என்பதனை ஏற்க முடியாது.

பனை மரத்தை வெட்டி வாழ்வாதாரம் செய்வது அலுக்கோசு வேலைக்குச் சமனானது.

சம்பளம் கூடிய தொழில் அலுக்கோசு தொழில்.அதற்கான அலுக்கோசு தொழிலை அனுமதிக்க முடியாது. அது போன்றே பனை மரம் தறிப்பதனையும் ஒரு தொழிலாக ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த விதத்தில் மன்னார் அரச அதிபரின் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

விரைவில் மன்னார் மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலர்களையும் ஒருங்கிணைத்து, பனை ஆர்வலர்கள் மற்றும் பனை தறிப்பவர்கள் ஆகியோரை ஒரே நேரத்தில் அழைத்து, கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு அரச அதிபரை கேட்டுக்கொள்கிறோம்.

பனை தறிப்பவர்களுடைய வாழ்வாதாரம் பனை மரத்தை வெட்டுவதில் அல்ல, பனை மரத்தைப் பாதுகாப்பதில்தான் தங்கியுள்ளது.

இதனை அரச அதிபர் மற்றும் பனை மரத்தை வெட்டும் தொழிலை வாழ்வாதாரமாக பார்க்கின்ற மக்களின் பிரதிநிதிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மன்னார் மாவட்டத்தின் நில வளம், நீர் வளம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியன பனை மரத்தில் தான் தங்கியுள்ளது. அதானி திட்டத்தில் 20ஆயிரம் பனை மரங்களை அழிக்க அமைச்சரவை பத்திரம் ஊடாக அனுமதி வழங்கப்பட்ட பின்னர் கூட பனை அபிவிருத்திச்சபையின்அதிகாரத்தைப்பயன்படுத்தி அதனை நிறுத்தினோம். அவ்வாறு நாம் தடுத்து நிறுத்தியது நன்மையா, தீமையா என மக்கள் இப்போது உணர்வார்கள்.

பனை மரத்தை பாதுகாத்து, அதனூடாக வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்ற உத்தரவாதத்தை பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் என்ற அடிப்படையில் நான் தருகிறேன். - என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

රජයේ හෙද නිලධාරීන්ගේ සංගමය
அரச தாதி உத்தியோகத்தர் சங்கம்
Government Nursing Officers' Association

අංක. 1/14, මරදාන පාර, කොළඹ 10
දුරකථන අංකය:0112-684031, 0714 854345, 0714-941438, 0718203414
ෆැක්ස්:0112-684031 E-mail : gnoasl@gmail.com
Website : www.srilankannursing.net blog : www.gnoasl.blogsopt.com Reg No : 6400

TEACHING HOSPITAL JAFFNA.

# வைத்தியர் - பொறுப்புத் தாதி இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டினால் அசாதாரண சூழ்நிலை

## யாழ் வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர் சங்கம் விளக்கம்

யாழ் போதனா வைத்தியசாலையில் விபத்து, சத்திரசிகிச்சை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் கடமை புரியும் வைத்தியர் ஒருவருக்கும் பொறுப்புத் தாதிக்கும் ஏற்பட்ட சிறிய கருத்து முரண்பாட்டின் பின்னணியிலேயே வைத்தியசாலையில் அசாதாரண சூழ்நிலை தோன்றியுள்ளது என அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கிளை தெரிவித்துள்ளது.

யாழ் போதனா வைத்தியசாலையில் விபத்து, சத்திரசிகிச்சை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை சம்பந்தமாக வைத்தியசாலையின் அரச தாதி உத்தியோகத்தர் சங்கத் தலைவர் தர்மகுலசிங்கம் பானுமகேந்திரா வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

மேற்படி பிரிவு 20 வருடங்களுக்கு மேலாக யாழ் மக்களுக்குத் தேவையான அவசியமான சிகிச்சை, பராமரிப்பு முறைகளை திட்டமிட்டு தொடர்ச்சியாக வழங்கி வருகிறது.

இங்கு மிகக்குறைந்த தாதியர் ஆளணியுடன் வினைத்திறனான சேவையை வழங்கி வருகின்றனர். இந்த அலகிற்கான சேவையை வழங்க ஆகக்குறைந்தது 30 தாதிய உத்தியோகத்தவர்கள் தேவைப்படும் நிலையில் 13 தாதிய உத்தியோகத்தர்களே கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி விடுதிப் பராமரிப்பு திட்டங்களை தர நிலையிலுள்ள தாதிய உத்தியோகத்தர் ஒருவர் கடந்த 4 வருடங்களுக்கு மேலாக திறம்பட முகாமைத்துவம் செய்து வருகின்றார். இவர் 20 வருடங்களுக்கு மேலான சேவை அனுபவத்தினை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் நிறைவு செய்த ஓர் அர்ப்பணிப்பான சேவையாளர் என்பதனைக் குறிப்பிட விரும்புகின்றோம்.

இவர் கடமைபுரிந்த காலப்பகுதியில் தனது குழு உறுப்பினர்களுடன் (வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள்) மிகவும் அந்நியோன்னியமான உத்தியோக ரீதியான உறவு முறையினை பேணி நோயாளர் பராமரிப்புத் திட்டத்திற்கு வெற்றிகரமான செயற்பாட்டினை உறுதி செய்துள்ளார்.

மிகக் குறுகிய காலத்தில் அங்கு கடமை புரியும் வைத்தியர் ஒருவருக்கும் பொறுப்புத் தாதிக்கும் ஏற்பட்ட சிறிய கருத்து முரண்பாட்டின் பின்னணியில் இந்த அசாதாரண சூழ்நிலை தோன்றியுள்ளது. இது சம்பந்தமாக ஆரம்பக் கட்ட விசாரணைகள் முடிவடையும் தறுவாயில் இருக்கின்றமையுடன் சுகாதார அமைச்சின் முறையான விசாரணைக்கு இவ்விடயம் உட்படுத்தப்பட்டுள்ளது. விசாரணை முடிவடையும் பட்சத்தில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வொன்றினைப் பெற்றுக்கொள்ள முடியும் என நாம் கருதுகின்றோம்.

எனவே இந்த விடயம் சம்பந்தமாக எமது சேவையைப் பெற்றுக்கொள்ளும் அனைத்து மக்களும் சேவையின் அவசியத்தினை உணர வேண்டும் என்பதனையும் தேவையற்ற விடயங்களை கருத்தில் எடுக்க வேண்டாம் எனவும் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

மேற்படி விடயம் சம்பந்தமாக பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்பதனையும் இவை எமது கண்ணியமான சேவைக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளன என்பதையும் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த முரண்பாடுகள் திட்டமிட்ட ரீதியில் குறிப்பிட்ட சில நபர்களால் மேற்கொள்ளப்படும் சதி நடவடிக்கைகள் என்பதனை மக்கள் புரிந்துகொண்டு விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டிய காலப்பகுதியில் இருக்கிறோம் என்பதனை தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

எமது வைத்தியசாலையில் அர்ப்பணிப்பாக சேவைபுரியும் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் கடமையாற்றுகின்றனர். அவர்கள் எம்முடன் குழுவாக இணைந்து மக்களுக்கான சேவையினை தங்குதடையின்றி இதுவரை வழங்கி வந்துள்ளார்கள். இவ்வாறான சேவை இவர்களுடன் இணைந்து தொடர்ந்து வழங்கப்படும் என்பதனை உறுதிபட தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

# மத்தியூ அடிகளாரின் நினைவுப் பேருரை இன்று கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில்

**( வி.ரி. சகாதேவராஜா)**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "தொடர் நினைவு பேருரை - 2025" நிகழ்வில் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் முன்னாள் அதிபர் கல்விமான் மதியூகி அருட் சகோதரர் எஸ்.ஏ.ஐ மத்தியூ நினைவுப் பேருரை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணிக்கு கல்முனை கார்மேல் பற்றிமாக் கல்லூரி (தேசிய பாடசாலை) யில் நடைபெற உள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பற்றிமா தேசிய கல்லூரியின் அதிபர் வண. அருட்சகோதரர் எஸ்.ஈ. ஹெஜினோல்ட் கலந்துகொள்கிறார்.

நிகழ்விற்கு கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி ஜே. அதிசயராஜ் தலைமை வகிக்க, நினைவு நாயகரை பிரபல எழுத்தாளர் உமா வரதராஜன் அறிமுகம் செய்து வைக்கிறார்.

இந்நிகழ்வில் நினைவுப் பேருரையை "சர்வதேச தரத்திற்கு ஈடுகொடுக்க முடியாத வகையில் இலங்கையின் கல்விச் செயன்முறை நகர்கிறதா?" எனும் தலைப்பில் அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரி முன்னாள் பீடாதிபதி சட்டத்தரணி கி. புண்ணியமூர்த்தி வழங்குகிறார்.

பேருரையாளர் அறிமுகத்தை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ச.நவநீதன் மேற்கொள்ள நன்றி உரையை கலாசார உத்தியோகத்தர் த. பிரபாகரன் வழங்குவார்.



# மூதூரில் பஸ்-லொறி விபத்து 33 பயணிகள் வரை படுகாயம்!

**( எம்.எஸ். சனோபர் ஹலால்தீன், முஹம்மது ஜிப்ரான் )**

மட்டக்களப்பு – திருகோணமலை பிரதான வீதியின் அருகிலுள்ள – மூதூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பச்சனூர் இருதயபுரத்தில் நேற்று மாலை 3.00 மணி அளவில் பஸ் ஒன்றும் லொறி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகின. இதில் பஸ்ஸில் பயணித்த 18 பெண்கள் உட்பட 33 பேர் படுகாயமடைந்தனர்.

ஓயான்கொட பிரதேசத்திலிருந்து, சேருநுவர விகாரையை நோக்கி யாத்திரிகர்களுடன் பயணித்த பஸ்ஸும் எதிர்த் திசையிலிருந்து வந்த லொறியும் நேருக்கு நேர் மோதியுள்ளன.

இவ்விபத்துக் குறித்து மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.








# பவுஸரில் எடுத்து வந்த 3,300 லீற்றர் டீஸலை ஆட்டையைப் போட்ட சாரதியும் உதவியாளரும்

## கைதாகி நாளை வரையில் விளக்கமறியலில்

(கனகராசா சரவணன் )

அம்பாறை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு பவஸரில் கொண்டு சென்ற எரிபொருளை வழங்கி விட்டதாகத் தெரிவித்து 9 லட்சத்து 43 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியான 3,300 லீற்றர் டீஸலை வழங்காது மோசடி செய்து, வெளியில் விற்பனை செய்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுதாபனத்தின் சாரதி மற்றும் அதன் உதவியார் இருவரையும் நாளை 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.



இது பற்றி தெரியவருவதாவது:-

மட்டக்களப்பு பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தில் எரிபொருள் பவுஸரில் சாரதியாகவும் அதன் உதவியாளராகவுன் கடமையாற்றிவரும் இருவரும் கடந்த வியாழக்கிழமை அம்பாறை நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருளை பவுஸரில் எடுத்து சென்று டீஸலை அங்கு நிலத்திலுள்ள தாங்கியில் நிரப்பியிருக்கின்றனர். தாங்கியில் சிறியளவு டீஸலை வழங்கிவிட்டு, முழு டீஸலும் பவுஸரில் இருந்து தாங்கியில் நிரப்பி விட்டனர் எனத் தெரிவித்து 3,300 லீற்றர் டீசலை மோசடி செய்து கொண்டு அதனை அங்கிருந்து பவுஸரில் கொண்டு வந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அந்த எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் அங்கு பொருத்தப்பட்டுள்ள சிசிரிவி கமராவில் டீஸலை அங்கு முழுமையாக இறக்காது கொண்டு செல்வதைக் கண்டு உடனடியாக மட்டக்களப்பிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுதாபனத்துக்கு அறிவித்தார். அதையடுத்து அதிகாரிகள் அந்த பவுஸர் எங்கிருக்கின்றது என ஜி.பி.எஸ். கௌவி மூலம் சோதனையிட்டபோது கல்லடிபகுதியில் பவுஸர் இருப்பதைக் கண்டறிந்தனர்.

இதனையடுத்து பொலிஸாருக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. சட்டவிரோதமாக டீஸலை விற்பனை செய்வதற்காக பவுஸரில் இருந்து டீஸலை எடுத்து கலன்களில் நிரப்பிக் கொண்ட நிலையில் பவுஸர் சாரதி மற்றும் அவரது உதவியார் இருவரையும் பொலிஸார் கைது செய்ததனர். டீசலுடன் கலன்களும் மீட்கப்பட்டன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட கிரான் குளம் மற்றும் கல்லடியைச் சேர்ந்த இருவரையும் மட்டக்களப்பு நீதிவான் நீதமன்றத்தில் பொலிஸார் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தயதையடுத்து இருவரையும் நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# கணேமுல்ல கொலை தொடர்பில் மேலும் 2 சந்தேக நபர்கள் கைது

கணேமுல்ல சஞ்சீவ கொலையுடன் தொடர்புடைய மேலும் 2 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினரால் மினுவாங்கொடையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே மேற்படி சந்தேகநபர்கள் கைதாகியுள்ளனர்.



குற்றத்தை வழிநடத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட தொலைபேசி சிம் அட்டையை வழங்கிய சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மினுவாங்கொடை மெதகொவ்வ மற்றும் துனகஹ பகுதிகளை சேர்ந்த 28 மற்றும் 31 வயதான சந்தேகநபர்களே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இதுவரை 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# 3ஆவது மீளாய்வுக் கடன் தவணைக்கு ஐ.எம்.எவ். நிறைவேற்று குழு அங்கீகாரம்

நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் இலங்கைக்கான மற்றுமொரு தவணை கடனுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று குழு அங்கீகாரம் அளித்துள்ளது.

334 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மூன்றாவது மீளாய்விற்கான கடன் தவணையை விடுவிப்பதற்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

48 மாதங்களுக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் சர்வதேச நாணய நிதியத்தால் இதுவரையான காலப் பகுதிக்குள் இலங்கைக்கு விடுவிக்கப்பட்டுள்ள மொத்த கடன் தொகையின் அளவு 1.34 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

# 2009இல் சரணடைந்தோர் படுகொலை செய்யப்பட்டு வட்டுவாகல் விகாரையின் கீழ் புதைக்கப்பட்டுள்ளனர்!

## ஆய்வுகளை மேற்கொள்ள நீதி அமைச்சைக் கோருகிறார் ரவிகரன் எம்.பி.



(பா.சதீசன்)

கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இராணுவத் தினரிடம் சரணடைந்தவர்கள் படு கொலை செய்யப்பட்டு, தற்போது முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையின் கீழ் பகுதியில் புதைக்கப்பட்டிருக்கின்றார்கள் என மக்கள் பலரும் தம்மிடம் முறை யிட்டுள்ளனர் என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே மடியில் கனமில்லையெனில் விகாரையை அகற்றி அகழ்வினை மேற் கொண்டோ, நவீனமுறையில் ஸ்கான் கருவிகள் மூலம் ஆய்வுகளை மேற் கொண்டோ உண்மையைக் கண்ட றிய அரசாங்கம் முன்வரவேண்டுமென நீதி அமைச்சை அவர் கோரியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் நீதி மற்றும் தேசிய ஒற்றுமைப்பாடு அமைச்சிற் கான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி நீதியை வழங்குமாறும், அரசியல் கைதிகள் விவகாரம், காணா மல் ஆக்கப்பட்டோர் விவகாரம். கொக் குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவ காரம், அரச திணைகளங்கள் மற்றும், அரசபடைகளால் தமிழ் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்படும் விவ காரங்கள் என்பவற்றிற்கும் நீதியை வழங்குமாறும் நாடாளுமன்ற உறுப் பினர் ரவிகரன் நீதி அமைச்சைக் கோரி யுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத் துத் தெரிவிக்கையில் -

தேசிய மக்கள் சக்தி அரசு இதுவரை இனவாதம் பேசவில்லை. வரவேற் கின்றோம். தமிழர்கள் இந்த நாட்டில் ஒரு பலமான சக்தி. இதனை முழுமன தோடு ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழர்கள் நாம் நீதி கேட்கின்றோம்.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப் படுதல் வேண்டும். ஜனாதிபதியும் தனது நேற்றைய உரையில் குறிப்பிட்டிருந்தார். நடந்தால் வரவேற்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதி கிடைக்கவேண்டும்.

நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிரவேறொன்று மில்லை.

யுத்தம் மௌனிக்கப்பட்டபோது தமது உறவுகளை, குறிப்பாக கண வரை மனைவியும், மகன், மகளை பெற்றோரும், வட்டுவாகல் சப்தகன்னி மார் ஆலய முன்றலில் ஒப்படைத் தார்கள். தடுப்புமுகாம்கள், கடல் எனப் பல இடங்களிலும் சரணடைந்தார்கள்.

வட்டுவாகலில் ஒப்படைக்கப்பட்ட வர்கள் கொக்குத்தொடுவாய் நோக்கியும், கேப்பாப்புலவு நோக்கியும், வட்டுவாகல் கடற்கரை நோக்கிய பாதையிலும் பஸ் களிலும் கொண்டுசெல்லப்பட்டார் கள்.

இலங்கைப் படையினரிடம்தான் ஒப்படைத்தோம். இன்னும் காணவில் லையே, அவர்கள் எங்கே என்று தேடுகின்றார்கள். நீதிஅமைச்சரே நீதி தாருங்கள். நியாயப்படி நடந்து கொள்ளுங்கள்.

வட்டுவாகல் கடற்கரைப் பாதை நோக்கி பஸ்களில் ஏற்றிக்கொண்டு சென்றவர்களை விட்டு விட்டு பஸ்கள் மட்டும் திரும்பி வந்தன எனவும் மக்கள் சொல்கின்றார்கள். வட்டுவாகல் தனித் தமிழ் சைவக்கிராமமாகும். பௌத்தர்கள் இல்லாத இடத்தில் ஒரு பெரியவிகாரை இப்போது அமைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரண டைந்தவர்களை கொண்டு சென்று, படு கொலை செய்து புதைத்துவிட்டு அதன் மேல் இவ்வாறு பெரியவிகாரை இங்கு அமைத்துவிட்டதாக மக்கள் கூறுகின்ற னர். உங்களின் மடியில் கனமில்லை என்றால் இதனை நிரூபியுங்கள்.

விகாரையை அகற்றி, ஆழமாகத் தோண்டுங்கள். அல்லது புதிய தொழில் நுட்ப முறையில் ஆழத்தில் இருப்ப வற்றை அறியக்கூடியதான நவீன கருவிகளைப் பயன்படுத்தி உண்மையை வெளிப்படுத்துங்கள்.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதை குழிக்கும் நீதியைத்தாருங்கள். சில வேளை நீங்கள் நீதியைத் தரும் போது, நீதிபதி சரவணராஜா போல் தான் உங்களுக்கும் நீதி கிடைக்குமோ தெரியாது. ஆயினும் இன்றைய அரசை நம்புவோம்.

அதேபோல் முல்லைத்தீவில் மக்க ளின் காணிகள் அரச திணைக்களங் களால் அபரிக்கப்பட்டுள்ளன.

2009ஆம் ஆண்டிற்குமுன்பு 2,22006 ஏக்கர்தான் அடர்ந்த காடுகள் உட்பட வனஇலாகாவின்கீழ் இருந்தது. 2009ஆம் ஆண்டின் பிற் பாடு 4,32121ஏக்கர் காணிகள் வனஇலா காவிடம் உள்ளது.

மக்களுடைய பயன்பாட்டில் இருந்த சிறுதானியப் பயிர்ச்செய்கை, தோட்டப் பயிர்ச் செய்கை, நெற்பயிர்ச்செய்கை செய்த மக்களின் காணிகளை, கிராம அலுவலர், காணி உரிமையாளர்கள், பிரதேசச்செயலாளர், மாவட்டச்செயலா ளர் யாரிடமும் கேட்காமல் எல்லைக் கற்களையிட்டு தங்களுடைய கட்டுப் பாட்டில் கொண்டுவந்துள்ளார்கள் வன வளத் திணைக்களத்தினர்.

இந்நிலையில் தங்களுடைய வாழ்வாதாரத்துக்குரிய பயன்பாட்டில் இருந்த காணிகள் இல்லாது மக்கள்படும் துன்பங்கள் ஏராளம். நான் குறிப்பிடும் விடயங்கள் முல்லைத்தீவில் மட்டுமல்ல மன்னார், வவுனியாவிலும் உள்ளது.

படையினரும் எமது மக்களின் வாழ்வாதார மற்றும் குடியிருப்புக் காணி களை அபகரித்து வைத்துள்ளனர்.

முல்லைத்தீவில் 100க்கு மேற்பட்ட படையினர் முகாம்கள் காணப்படு கின்றன. அங்கிருக்கும் மக்கள் தொகை யின் அரைவாசிக்கு படையினர் அதாவது இரண்டு சிவிலியன்க்ளுக்கு ஒரு படையினர் காணப்படுகின்றனர். கிட்டத்தட்ட 35,000 ஏக்கர் காணிகள் படையினரிடம் காணப்படுகின்றன.

இதில் பெரும்பகுதி காணிகள் மக்க ளுடைய வாழ்வாதாரத்துக்குரியவையும், குடியிருப்புக்காணிகளுமாகும். இப்படி இருக்க நாங்கள் எப்படி பாதுகாப்பு அமைச்சின் வாக்களிப்பில் ஆதரிப்பது?

எனவே கௌரவ நீதிஅமைச்சர் அவர்களே இந்த விடயங்களுக்கு நீதி தாருங்கள் என்று கேட்கின்றோம் - என்றார்.



# கட்டளையை மீறி பயணித்த லொறி மீது துப்பாக்கிச்சூடு

வத்தளை யில் திருடப்பட்டு தப்பிச் செல்ல முற்பட்ட லொறி மீது கடுவல யில் பொலிஸாரால் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வத்தளையில் நிறுத்தப்பட்டி ருந்த மரக்கறி ஏற்றிய லொறியைத் திருடி ஒருகொடவத்தை பகுதிக்கு கொண்டுசெல்வதாக தகவல் கிடைத்த தாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதற்கமைய மோட்டார் சைக் கிள் அணியினரை ஈடுபடுத்தி நேற்று மேற்கொண்ட தேடுதலின் போது கடுவலயில் இருந்து மாலபே நோக்கி கட்டளையை மீறி பயணித்த லொறி மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப் பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ள னர்.

துப்பாக்கிச்சூட்டினால் லொறி யின் டயர்களுக்கு சேதமேற்பட்டுள்ள துடன், லொறியைக் கைவிட்டு தப்பிச் செல்ல முற்பட்ட சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.



# ஜப்பானில் தாதியர்களாக பணியாற்ற இலங்கையர்களுக்கு வாய்ப்பு

ஜப்பானில் தாதியர்களாக பணி யாற்றுவதற்கு இலங்கையர்களுக்கு அதிகளவில் வாய்ப்பு வழங்கப்படவுள்ள தாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கும் ஜப்பானிய நிறுவனம் ஒன்றிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய இலங்கையர்களுக்கு இந்த வேலை வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.

அதன்படி, 18 முதல் 35 வய துக்கு இடைப்பட்ட இளைஞர் யுவதிக ளுக்கு இந்த வேலைவாய்ப்பு வழங் கப்படவுள்ளது.

இதனூடாக 5 வருடங்களுக்கு தாதி யராக பணியாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்படவுள்ளதுடன், 4 லட்சம் ரூபா வினை வருமானமாகப் பெற முடியும் எனவும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான சொகுசு வாகனங்களின் ஏலம் ஆரம்பம்

ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்த மான 14 சொகுசு வாகனங்கள், செயலி ழந்த 6 வாகனங்கள் மற்றும் வாகன உதிரி பாகங்கள் விற்பனை தொடர்பான ஏலம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அரசாங்கசெலவினங்களைக்குறைத் தல் மற்றும் நிதிப் பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கும் நோக்கில் ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான வாகனங் களை விற்பனை செய்ய தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அதன்படி நேற்று 09 டிஃபென்டர் ஜீப்கள், வோல்வோ ஜீப், கிரைஸ்லர் கார், மகேந்திர பொலேரோ, ரோசா பஸ், டிஸ்கவரி கார், டொயோட்டா கார் உள்ளிட்ட 15 வாகனங்கள் ஏலம் விடப்பட்டு, மீதமுள்ள வாகனங்கள் தொடர்பான ஏலம் விரைவில் நடை பெற உள்ளது.

இந்த வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு அதிக போட்டி நிலவியதால் நேற்று முன்தினம் நண்பகல் 12.00 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொ காள்ளப்பட்டு இரவு 8.00 மணி வரை ஏலம் நடைபெற்றது.

இதில் 199 வர்த்தகர்கள் இணைந் துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.





# குமரி அந்தோணியார் திருவிழாவில் மின்சாரம் தாக்கி 4 பேர் உயிரிழப்பு

கன்னியாகுமரி மாவட்டம் இனயம் புத்தன்துறை அந்தோணியார் தேவாலய திருவிழாவில் நேற்று சனிக்கிழமை அலங்கார பணிகளை மேற்கொண்ட போது உயரமான இரும்பு ஏணி உயர முத்த மின்கம்பியில் சாய்ந்ததில் மின்சாரம் தாக்கி 4 மீனவர்கள் உயிரிழந்துள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டம் தேங்காபட்டணம் பகுதியில் இனயம் புத்தன்துறை என்ற மீனவ கிராமம் உள்ளது. இங்குள்ள அந்தோணியார் தேவாலயத்தில் திருவிழா நடைபெற்று வருகிறது. திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேர்பவனி இன்று நடைபெறவுள்ள நிலையில், தேர் செல்லும் பகுதிகளில் தேர் செல்ல தடையாக உள்ள பொருள்களை அகற்றும் பணியும், அலங்காரம் மேற்கொள்ளும் பணியும் இன்று நடைபெற்றது.

இதற்காக, சக்கரங்களுடன் கூடிய உருட்டி செல்லும் வகையில் அமைந்துள்ள 30 அடிக்கு மேல் உயரம் கொண்ட இரும்பு ஏணியை பயன்படுத்தி, பக்தர்கள் சீரமைப்பு பணியில் ஈடுபட்டனர். நேற்று மாலை ஏணியை தேவாலயம் முன்பிருந்து வேறு இடத்துக்கு கொண்டு சென்றபோது அங்கு உயரழுத்த மின்கம்பில் ஏணி உரசியது. இதில் மின்சாரம் ஏணியில் பாய்ந்து ஏணியை உருட்டி சென்ற 4 பேர் மீதும் மின்சாரம் தாக்கியது.

இதில் 4 பேரும் ஏணியை விட முடியாததால் உடல் கருகினர். அவர்களின் உடல் மீது தீப்பொறி பற்றியதால் அங்கு திரண்டிருந்த பக்தர்கள், பெண்கள் கதறி அழுதனர். பொதுமக்கள் கூடி அவர்களை காப்பாற்ற முயன்றனர். ஆனால் மின்சாரம் பாய்ந்ததால் யாரும் பக்கத்தில் நெருங்க முடியவில்லை. ஏணியில் சிக்கிய 4 பேர் மீதும் தீப்பொறி பற்றி எரிந்ததால் அவர்களை காப்பாற்ற முடியவில்லை. இதனால் 4 பேரும் உடல் கருகி சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளனர்.

# உத்தரகண்டில் பனிச்சரிவு: ஒருவர் பலி; 49 பேர் மீட்பு



இந்தோ – திபெத் எல்லை அருகே உள்ள உத்தரகண்டில் திடீரென நேற்று முன்தினம் பனிச்சரிவு ஏற்பட்டுள்ளது.

57 ஊழியர்கள் பனிச்சரிவில் சிக்கினர். இதில் 10 பேர் முதலில் மீட்கப்பட்டனர்.

இந்த நிலையில், பனிச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு வரை 32 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

தொடர்ந்து மீட்புப்பணி நடைபெற்று வந்த நிலையில் நேற்று முதலில் 17 பேர் மீட்கப்பட்டனர். மதியம் வரை 49 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று மீட்கப்பட்டவர்களில் பலருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவர்கள் இராணுவ முகாமுக்குச் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ட்ரம்ப்பிடம் மன்னிப்புக் கேட்க மறுப்பு தெரிவித்தார் ஜெலன்ஸ்கி



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிடம் மன்னிப்பு கேட்க உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி மறுப்பு தெரிவித்துள்ளார்.

ரஷ்ய – உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்கா மேற்கொண்டு வரும் முயற்சியின் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் வொஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிற்கும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கிக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பு கடும் வாக்குவாதத்தில் நிறைவுபெற்றது.

இந்தச் சந்திப்புக்குப் பிறகு, உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கி, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சு வலியுறுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், வெள்ளை மாளிகையில் நடந்த சந்திப்பின் போது தான் எந்த தவறும் செய்ததாக தெரியவில்லை எனவும், ட்ரம்ப்பிடம் மன்னிப்பு கேட்க எந்த காரணமும் இல்லை எனவும் உக்ரைன் ஜனாதிபதி கூறியுள்ளார்.

கடுமையான வாக்குவாதத்தின் பின் வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கி இதனைத் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவின் புதிய வரி விதிப்பு மார்ச் 4ஆம் திகதி முதல் அமுலாகும்



கனடா, சீனா, மெக்சிகோ ஆகிய நாடுகளின் மீதான புதிய வரி விதிப்பு மார்ச் 4 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பொருளாதாரத்தை பாதுகாக்கவும், சீனாவின் வர்த்தக முறைகேடுகளை தடுக்கவும் சீனா, கனடா, மெக்சிகோ ஆகிய 3 நாடுகளுக்கும் புதிய வரி விதிப்பை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்த வரி விதிப்பு பெப்ரவரி மாதம் அமலுக்கு வருவதாக அறிவித்திருந்த நிலையில், மேலும் ஒருமாத கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மார்ச் 4 ஆம் திகதி முதல் இந்த புதிய வரி விதிப்பு அமலுக்கு வருவதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ட்ரம்ப் விதித்துள்ள புதிய வரியின் படி, கனடா மற்றும் மெக்சிகோவிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு 25 சதவிகித வரியும், சீனாவிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு 10 சதவிகித வரியும் விதிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் ஆற்றல் துறை சார்ந்த இறக்குமதிகளுக்கு 10 சதவிகித வரியும் விதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# 7,000 பணியாளர்களைக் குறைக்கின்றது அமெரிக்க சமூக பாதுகாப்பு நிறுவனம்!




அமெரிக்க சமூக பாதுகாப்பு நிறுவனம், அதன் 7,000 பணியாளர்களை குறைப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

10 மில்லியன் வயோதிப அமெரிக்கர்களுக்குச் சலுகைகளை வழங்கும் இந்த நிறுவனத்தில் பணியாளர்களின் அளவை குறைப்பதற்கான நடவடிக்கை, பணியாளர்களைக் குறைக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினது தீர்மானத்தின் ஒரு பகுதியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் 73 மில்லியன் ஓய்வுபெற்ற மற்றும் விசேட தேவையுடைய அமெரிக்கர்களுக்குக் காசோலைகளை அனுப்பும் சமூக பாதுகாப்பு நிறுவனம் அதன் பணியாளர்களை 12 சதவீதத்திற்கும் அதிகமானோரைக் குறைக்கப் போவதாக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அத்துடன், தமது பிராந்திய அலுவலகங்களை மூடவுள்ளதாகவும் அமெரிக்க சமூக பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 02.03.2025




இன்று நீங்கள் நம்பிக்கை நிறைந்து காணப்படுவீர்கள். உங்களின் கடின முயற்சி மூலம் வெற்றி பெறுவர்கள். புதுமையாக யோசித்து புதிய கருத்துக்களை உருவாக்க இது உகந்த நேரம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள். சிறப்பக திட்டமிட்டு உங்கள் பணிகளை முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நகைச்சுவையான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இந்த உணர்வால் இன்று நல்லிணக்கமும் திருப்தியும் காணப்படும்.

இன்று பணம் சேமிப்பதற்கு சாதகமான நிலை காணப்படும். இன்று நல்ல வாய்புகள் காணப்படுவதால் கணிசமான தொகை வருவதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று உங்களின் ஆற்றல் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சுமாராக இருக்கக் காண்பீர்கள். நீங்கள் விரும்பிய பலனை அடைய சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். உங்கள் இலக்குகளை எளிதாக அடைவது சிறிது கடினமாக இருக்கும்.

உங்கள் பணிகள் சுமூகமாக நடைபெற மற்றும் பணியில் நற்பலன் காண உங்கள் புத்திசாலித் தனத்தைப் பயன்படுத்த வேண்டும்.

உங்கள் மனதில் சில குழப்பங்கள் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும். எனவே பொறுமையை பராமரிக்க வேண்டும்.

இன்று சற்று இறுக்கமான நிதிநிலைமை காணப்படும். குழந்தைகளின் நலன் போன்ற அதிகரிக்கும் பொறுப்புகளுக்கு செலவு செய்ய நேரும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. நீங்கள் தைரியமாக நேர்மறை எண்ணத்துடன் இருக்க வேண்டும். உணர்ச்சிவசப்படாமல் இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். எந்த விஷயத்தையும் நட்பு முறையோடு அணுக வேண்டும்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது. முறையாக திட்டமிட்டு கவனமாக பணியாற்றவும்.

உங்களின் இனிமையான அணுகுமுறை மூலம் உங்கள் நாளை நீங்கள் சிறப்பாகஆக்க வேண்டும். உங்கள் துணையுடன் அன்பை வளர்க்க முயலுங்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் குடும்பத்துக்காக தேவையற்ற செலவு மேற்கொள்ள வேண்டியிருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று உங்கள் நண்பர்கள் மற்றும் பரிச்சயமானவர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் நண்பர்களை மகிழ்விப்பீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் உங்கள் மீது நல அபிப்பிராயம் ஏற்படும்.

உங்களின் சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். நிதி நிலைமை செழிப்பாக இருக்கும்.

உங்களின் சந்தோஷமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்கக் காண்பீர்கள்.முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். பக்தியில் ஈடுபடுவதற்கும் இறை வழிபாட்டிற்கும் உகந்த நாள். கடின உழைப்பின் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். உங்கள் திறமைகளை பணியிடத்தில் நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உறவை உருவாக்க முடியும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் தேவைப் பட்டால் கடன் பெறலாம்.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். எனவே ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் ஆறுதல் தேடி கோவிலுக்கு செல்வீர்கள். இன்றைய நாள் சீராக செல்ல நீங்கள் சற்று விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். பிரார்த்தனை மேற்கொள்வது ஆறுதல் அளிக்கும்.

உங்கள் பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள திட்டமிட்டு செயல் புரிய வேண்டும். பணியில் கெட்ட பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாகப் பணிகளைக் கையாள வேண்டும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இத்தகைய உணர்வை தவிர்த்து மகிழ்ச்சியை பராமரிக்க வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் காணப்படும். உங்கள் மதிப்பு வாய்ந்த பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியது அவசியம்.




இன்று நீங்கள் ஓய்வாக இருக்க வேண்டிய நாள். மகிழ்ச்சியை அளிக்கும் சூழ்நிலை இருந்தாலும் நீங்கள் அமைதியின்றி காணப்படுவீர்கள். இது உங்களை பாதிக்கும். நல்ல பலன்களைக் காண மகிழ்ச்சியாகவும் நம்பிக்கையுடனும் இருங்கள்.

பணியிடத்தில் ஸ்திரமான சூழல் இருக்காது. பணியின்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பான உணர்வுகளை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இன்றைய நாளை இனிமையாக மகிழ்ச்சியாக வைத்திருக்க இது மிகவும் அவசியம்.

இன்று பணம் எளிதில் கிடைக்காது. பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைவு.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும்.உங்கள் இலக்குகளை அடைவதற்கு இன்று கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள். உங்களின் இனிமையான தொடர்பாடல் திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு உள்ளது. பயணம் அல்லது வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு உள்ளது. உங்கள் சுய வளர்ச்சிக்கு இன்றைய நாளை பயன் படுத்திக்கொள்ளுங்கள்.

இன்று சமநிலையான மன நிலையில் காணப்படுவீர்கள். உங்களின் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையின் இதயத்தில் இடம் பெறுவீர்கள்.

பண வரவு அபரிமிதமாக இருக்கும். நீங்கள் பயனுள்ள விஷயங்களுக்கும் குடும்பத்திற்கும் பணம் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.03.2025




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். உங்களின் எதிர்மறை சிந்தனை காரணமாக நீங்கள் பாதகமான விளைவுகளை சந்திப்பீர்கள். பிரார்த்தனை மற்றும் தியானம் நல்ல பலனளிக்கும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது.

உங்களிடம் மனக்குழப்பம் காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுதுவீர்கள். உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

உங்கள் விருப்பங்கள் நிறைவேற இன்று உகந்த நாள் அல்ல. நிதி வளர்ச்சியில் கட்டுப்பாடு காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்காது.




நீங்கள் பாதுகாப்பின்மை உணர்வுடனும் தனிமையாகவும், அவநம்பிக்கையுடனும் காணப்படுவீர்கள். நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். முன்கூட்டியே திட்டமிட்டு பணி புரிவதன் மூலம் சிறந்த பலன் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உங்கள் கருத்துகளை வெளிப்படையாக பகிர்ந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்.

இன்று நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. மருத்துவ செலவிற்காக நீங்கள் கூடுதல் பணம் செலவு செய்ய நேரும்.

இன்று நீங்கள் ஆரோக்கியத்தில் கவனம் கொள்ள வேண்டியது அவசியம்.




நீங்கள் நன்மை அடைந்தாலும் அதில் உங்களுக்கு திருப்தி இருக்காது. வெறுமையை உணர்வீர்கள். இன்று உங்கள் இலக்குகளை அடைவதில் தடைகள் காணப்படும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதைக் கடினமாக உணர்வீர்கள். பணிகளை குறித்த நேரத்தில் மேற்கொள்வதிலும் தாமதம் காணப்படும்.

உறவில் காணப்படும் கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் புரிந்துணர்வுப் பிரச்சினை காணப்படும்.

நிதி நிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இல்லாத காரணத்தால் பண வரவு காணப்படாது.

மன உளைச்சல் காரணமாக இன்று நீங்கள் தொடை வலியால் அவதிப்பட நேரலாம்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் இலக்குகளை அடைவதற்கு அதிர்ஷ்டம் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும். அது உங்களுக்கு மனநிறைவை அளிக்கும். மூத்தவர்கள் மற்றும் நலம் விரும்பிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். உங்களின் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.

இன்று உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் வாழ்க்கை பற்றி உங்கள் துணையிடம் கலந்தாலோசிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் நண்பர்களிடமிருந்து எதிர்பாராத பரிசாக பணம் கிடைக்க வாய்ப்புள்ளது.

# சிறைகளில் வாடும் ஆனந்தசுதாகர் உள்ளிட்ட தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்க!

## ரவிகரன் எம்.பி. நேற்று நாடாளுமன்றில் வலியுறுத்து

(விஜயரத்தினம் சரவணன்)

நீண்டாகாலமாக விடுதலையின்றி சிறைகளில் வாடும் ஆனந்தசுதாகர் உள்ளிட்ட தமிழ் அரசியல்கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு – செலவுத்திட்டத்தின் நீதி மற்றும் தேசிய ஒற்றுமைப்பாடு அமைச்சிற்கான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

தமிழ் அரசியல் கைதிகள் பலரும் விடுதலையின்றி நீண்டகாலமாக சிறையில் வாடுகின்றனர்.

குறிப்பாக கிளிநொச்சி, மருதநகரைச் சேர்ந்த ஆனந்தசுதாகர் என்பவர் கடந்த 2008 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.



இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆனந்தசுதாகர் ஆயுள் தண்டனை கைதியாக கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இவரது மனைவி கடந்த 2018 இல் உயிரிழந்தார். இந்நிலையில் இறுதிக் கிரியைக்கு கடும்பாதுகாப்புக்கு மத்தியில் சிறைச்சாலை அதிகாரிகளால் அழைத்து வரப்பட்டார்.

இறுதிக்கிரியையினை முடித்துக் கொண்டு சிறைச்சாலை பஸ்ஸில் ஆனந்தசுதாகர் ஏறச்சென்றவேளை அவரது பிள்ளை தந்தையின் கையைப் பிடித்து தானும் சிறைச்சாலை பஸ்ஸில் ஏறியசம்பவம் அனைவரது மனங்களையும் கலங்கவைத்தது.

நீதிஅமைச்சரே, நீதியைத்தாருங்கள். அவரோடு சேர்ந்து சிறையில் அரசியல் கைதிகளாக உள்ளவர்களுக்கும் விடுதலை தாருங்கள் – என்றார்.